# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/54 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06

*2261/54 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரோஹித அபேகுணவர்தன,
*துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்கு விதிகள்**

*1. (1) இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (நீர்வழிப்போக்குவரத்தின் காப்பு) ஒழுங்குவிதிகள் என. எடுத்துக்காட்டப்படலாம்.*


1A - G 35893 — 510 (2022/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) இவ்வொழுங்கு விதிகளின் நோக்கமானது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் V, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தம் என்பன வலுவுறுத்தப்படுவதற்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

**பாகம் I**

**இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையதாந்தன்மையும் நீர்வழிப்போக்குவரத்தின் காப்பும்**

2. (1) இவ்வொழுங்கு விதிகள் உப ஒழுங்குவிதிகள் (2), (3), (4), (5), (6) மற்றும் (7) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, தொன்னளவும் நிர்மாணத் திகதியும் தொடர்பாக இவ்வொழுங்குவிதிகளும் மற்றும் (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் இயைபான ஒழுங்குவிதிகளும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணமும், அவை எங்கேனும் இருந்து இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துள்ளவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடுகின்றவையுமான கப்பல்களுக்கும், மற்றும் இலங்கையின் நீர்ப்பரப்புகளில் இருக்கையில் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) போர்க்கப்பல்கள், கடற்படைத் துணைக்கப்பல்கள் மற்றும் சமவாயத்தில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, ஒப்பந்தஞ்செய்கின்ற அரசாங்கமொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றவையும் அல்லது தொழிற்படுத்தப்படுகின்றவையும் அரசாங்க வர்த்தகஞ்சாராச் சேவையில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றவையுமான கப்பல்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதலாகாது.

(3) சமவாயத்தின் அத்தியாயம் V இல் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளிலும் கனடா, கியுபெக் மாகாணத்திலுள்ள மொன்றியலில் சென்ட் லம்பேர்ட் லொக்கின் கீழ்ப்புற வெளிச்செல்வழியின் கிழக்குவரையுள்ள அவற்றின் தொடுக்கின்ற மற்றும் கிளையாற்று நீர்ப்பரப்புகளிலும் மட்டுமே நீர்வழிப்போக்குவரத்தில் உள்ள இலங்கைக் கப்பல்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) இரண்டாயிரத்துப் பதினேழாமாண்டு மே 4 ஆந் திகதிய 2017/31 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறிய வர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் கப்பல்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதலாகாது.

(5) சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதிகள் 19 மற்றும் 20, சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள 18 ஆம் ஒழுங்குவிதியின் பந்திகள் 1 முதல் 3 வரை மற்றும் 7 ஆம் அத்துடன் 8 ஆம் பந்திகள், அவை முறைமைகளுடனும் சாதனங்களுடனும் தொடர்புபடும் அளவுக்கு, ஏதேனும் கடற்பயணத்தில் ஈடுபட்டுள்ள 150 முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான கப்பல்கள் தொடர்பாக ஏற்புடையனவாகமாட்டாது.

(6) சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள 19 ஆம் ஒழுங்குவிதியின் பந்தி 2.2.3 ஆனது, ஏதேனும் கடற்பயணத்தில் ஈடுபட்டுள்ள 150 முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான கப்பலொன்றுக்கு அல்லது ஒரு சர்வதேசக் கடற்பயணத்தில் ஈடுபட்டிராத 500 முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான கப்பலொன்றுக்கு ஏற்புடையனதாகமாட்டாது.

(7) சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதி 23 பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனதாகமாட்டாது:-

(அ) ஏதேனும் கடற்பயணத்தில் ஈடுபட்டுள்ள 150 முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான கப்பல்கள்: அத்துடன்

(ஆ) சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டிராத 500 முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான கப்பல்கள்:

ஆயின், எந்தக் கடற்பயணத்தின்போது வழிகாட்டியொருவர் தொழிலுக்கமர்த்தப்படுகின்றாரோ அந்தக் கடற்பயணத்தில் அத்தகைய கப்பல்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

3. (1) (ஒவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதிகள் 15 இல், 17 முதல் 19 வரையில் (ஒழுங்குவிதி 19 இன் பந்தி 2.1.7 தவிர), 20 இல், 22 இல் மற்றும் 24 முதல் 28 வரையில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகள் எல்லாவற்றிலிருந்தும் அல்லது அவற்றுள் எவற்றிலிருந்தும், உந்துதலுக்கான பொறிமுறை வழிவகைகள் இல்லாத கப்பல்களுக்கு விலக்களிப்புகளை வழங்கலாம்.

(2) மூன்றாம் உப ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதி,-

(அ) குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது (விலக்களிப்புச் சான்றிதழிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றுள் எவற்றினதும் ஏற்புடைமையிலிலுருந்து விலக்களிப்புகளை வழங்கலாம்;

(ஆ) ஒழுங்குவிதிகளிலுள்ள தேவைப்பாடுகள் எந்த நோக்கத்துக்காக நிலைநாட்டப்படுகின்றனவோ ஆகக்குறைந்தது அந்த நோக்கத்துக்காகவேனும் அது பயனுள்ளதாகவுள்ளதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி, பரீட்சிப்பின்மூலம் அல்லது வேறுவகையாகத் திருப்திப்படின், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் பொருத்தி, பொருள், துணைப்பொருள் அல்லது உபகரணம், அல்லது அதன் வகை, அல்லது வழங்குகை, ஒரு கப்பலில் பொருத்தப்படுவதனை அல்லது கொண்டுசெல்லப்படுவதனை அனுமதிக்கலாம், அல்லது குறிப்பிட்ட ஏதேனும் பொருத்தியின், பொருளின், துணைப்பொருளின் அல்லது உபகரணத்தின், அல்லது அதன் வகையின், அல்லது வழங்குகையின் இடத்தில் கப்பலில் வேறு வழங்குகை செய்யப்படுவதனை அனுமதிக்கலாம்.

(3) உப ஒழுங்குவிதி (2) இன் நோக்கத்துக்காக, பணிப்பாளர் தலைமையதிபதி, கரையிலிருந்து கப்பலின் அதிகபட்சத் தூரம், கடற்பயணத்தின் காலநீட்சியும் தன்மையும், பொதுவான நீர்வழிப்போக்குவரத்துச்சார் ஆபத்துக்கள் இல்லாமை, மற்றும் காப்பைப் பாதிக்கின்ற வேறு நிலைமைகள் என்பன சமவாயத்தின் அத்தியாயம் V இன்முழுப் பிரயோகம் நியாயமற்றதாக அல்லது அவசியமற்றதாக இருப்பதனைத் தேவைப்படுத்தாதவொரு கடற்பயணத்தில் கப்பலானது ஈடுபட்டுள்ளதெனத் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகையவொரு விலக்களிப்பு அல்லது அனுமதி ஏனைய கப்பல்களின் காப்பின்மேல் கொண்டிருக்கக்கூடிய விளைவைக் கணக்குக்கெடுத்தலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது, சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதிகள் 18, 19, 19-1 அல்லது 20 இன் தேவைப்பாடுளிலிருந்து கப்பலிகளின் வகுப்புகளுக்காக அல்லது தனிப்பட்ட கப்பல்களுக்காக விலக்களிப்புகளை வழங்கலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீது, மரபுரிமைவழிசாரா வடிவமைப்பைக்கொண்ட கப்பல்களுக்காகச் சமவாயத்தின் அத்தயாயம் V இலுள்ள 22 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்புகளை வழங்கலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீது, காலநீட்சியில் இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குக் குறைந்தவையும், அத்தியாயம் V இலுள்ள 26 ஆம் ஒழுங்குவிதியின் 1 ஆம், 2 ஆம் பந்திகளினால் தேவைப்படுத்தப்பட்ட செவ்வைபார்த்தல்களும் சோதனைகளும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு வாரத்திலும் ஒரு தடவையேனும் நிறைவேற்றப்படுகின்றவையுமான கடற்பயணங்களில் கிரமமாக ஈடுபட்டுள்ள கப்பல்களுக்காக அப்பந்திகளின் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்புகளை வழங்கலாம்.

(7) 2022 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 06 ஆந் திகதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிக்ள ஏற்புடையனவாகவுள்ள ஒரு கப்பலுக்கு விலக்களிப்பொன்று வழங்கப்படும் போது, அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க அது வழங்கப்படுதல் வேண்டும்.

(8) (அ) 2022 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 06 ஆந் திகதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகாத

கப்பல்களுக்கு இவ்வொழுங்குவிதியின்கீழ் விலக்களிப்பொன்று வழங்கப்படும்போது, இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) (ஆ) வின்கீழ் அளிக்கப்பட்ட அனுமதி, அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழான ஒரு மாற்றம் அல்லது இல்லாதாக்குகை–

(i) எழுத்திலிருத்தல் வேண்டும்;

(ii) அது பயனுடையதாகவரும் திகதியைக் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) ஒரு விலக்களிப்பின் விடயத்தில், அது எந்நியதிகளின்மீது அளிக்கப்படுகின்றதோ அந்நியதிகளைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயமான அறிவித்தல் கொடுக்கப்பட்டதன்மீது, இவவொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் அனுமதியை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(இ) 2022 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 06 ஆந் திகதிய 2261 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகாத கப்பல்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பொன்று, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவமொன்றில் இருத்தல் வேண்டும்.

4. பணிப்பாளர் தலைமையதிபதி பின்வருமாறு திருப்திப்பட்டாலொழிய, இவ்வொழுங்குவிதிகளின்கீழான விலக்களிப்பொன்று வழங்கப்படுதலாகாது:-

(அ) சம்பந்தப்பட்ட வகுப்பினதான கப்பலுக்காக அல்லது தனிப்பட்ட கப்பலுக்காக அத்தகைய ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகுதல், ஒன்றில் செயல்முறைக்குகந்ததல்ல அல்லது நியாயமற்றது; அல்லது

(ஆ) ஆகக்குறைந்தது சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்குச் சமமாகவுள்ள காப்பு மட்டமொன்றை வழங்குகின்ற அத்தகைய நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் விலக்களிப்பானது அமைந்ததாகவுள்ளது.

5. (1) சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதியொன்று, நிருவாகத்தின் அங்கீகாரத்தைத் தேவைப்படுத்துகின்ற, நிருவாகத்தின் திருப்திக்குச் செய்யப்படவேண்டிய அல்லது நிருவாகத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவுள்ள எதனையும் குறிப்பீடுசெய்யுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், சமவாயத்தின் அத்தியாயம் V இன் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் இலங்கைக் கப்பல் தொடர்பாக அத்தகைய கருமத்திற்காக அங்கீகாரமொன்றை அளிக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன்மீது, முறையே பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் இவ்வொழுங்குவிதியின்கீழ் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை இல்லாதாக்கலாம் அல்லது அதன் நியதிகளை மாற்றலாம்.

(3) உபஒழுங்குவிதி (1) இன்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரமொன்று அல்லது உபஒழுங்குவிதி (2) இன்கீழான மாற்றமொன்று அல்லது இல்லாதாக்குகையொன்று–

(அ) எழுத்திலிருத்தல் வேண்டும்;

(ஆ) அது பயனுடையதாகவரும திகதியைக் குறித்துரைத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஓர் அங்கீகாரத்தின் விடயத்தில், அது நிபந்தனைகளின் அளிக்கப்படுகின்றதோ அந்நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்;

## பாகம் II

### நீர்வழிப்போக்குவரத்தின் காப்புப்பற்றிய தேவைப்பாடுகள்

6. (1) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (3) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற கப்பலொன்று, அதன் விவரணத்தினதான கப்பலொன்று தொடர்பாக ஏற்புடையனவாறானவையும் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவையுமான தேவைப்பாடுகளுள் அத்தகையவற்றுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) தேவைப்பாடுகளானவை பின்வரும் ஒழுங்குவிதிகளில் அல்லது சமவாயத்தின் அத்தியாயம் V இலுள்ள ஒழுங்குவிதிகளின் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டவையாகவுள்ளன:-

(அ) 7 ஆம் ஒழுங்குவிதியின் 3 ஆம் பந்தி;
(ஆ) 10 ஆம் ஒழுங்குவிதியின் 7 ஆம் பந்தி;
(இ) 11 ஆம் ஒழுங்குவிதியின் 7 ஆம் பந்தி;
(ஈ) 14 ஆம் ஒழுங்குவிதியின் 3 ஆம், 4 ஆம் பந்திகள்;
(உ) 17 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம், 3 ஆம் பந்திகள்;
(ஊ) 18 ஆம் ஒழுங்குவிதியின் 1 முதல் 3 மற்றும் 7 முதல் 9 வரையான பந்திகள்;
(எ) 19 ஆம் ஒழுங்குவிதி;
(ஏ) 19-1 ஆம் ஒழுங்குவிதியின் 2 ஆம் மற்றும் 4 முதல் 7 வரையான பந்திகள்;
(ஐ) 20 ஆம் ஒழுங்குவிதியின் 1 ஆம், 2 ஆம் பந்திகள்;
(ஒ) 21 முதல் 30 வரையான ஒழுங்குவிதிகள்;
(ஓ) 31 ஆம் ஒழுங்குவிதியின் 1 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகள்;
(ஔ) 32 ஆம் ஒழுங்குவிதியின் 1, 2, 4 மற்றும் 5 ஆம் பந்திகள்;
(க) 33 ஆம் ஒழுங்குவிதியின் 1, 2, 3, 4 மற்றும் 6 ஆம் பந்திகள்;
(ங) 34 ஆம் ஒழுங்குவிதி;
(ச) 34-1 ஆம் ஒழுங்குவிதி; அத்துடன்
(ஞ) 35 ஆம் ஒழுங்குவிதி;

(3) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற கப்பலொன்று, விடயத்துக்கேற்ப, மாற்றாக அல்லது மேலதிகமாக, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 321அ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் நியமங்களில் குறித்துரைக்கப்படுகின்றவாறான தேவைப்பாடுகள் எவையேனுமிருப்பின் அவற்றுள் அத்தகையவற்றுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இந்த ஒழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட தேவைப்பாடொன்று ஓர் அடிக்குறிப்பைக் கொண்ட ஏற்பாடொன்றில் தரப்பட்டு, சொல்லாட்சியிலிருந்தும் சந்தர்ப்பத்திலிருந்தும், அடிக்குறிப்பின், அல்லது அடிக்குறிப்பில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு தீர்மானத்தின், சுற்றறிக்கையின் அல்லது ஆவணத்தின் உள்ளீடு, தேவைப்பாட்டின் பாகமாக அமைவதற்கு உட்கருதப்படுகின்றதெனத் தெளிவாகவிருப்பின், அப்போது அத்தகைய உள்ளீடு, தேவைப்பாட்டின் பாகமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன் இந்நோக்கங்களுக்காக ஓர் "அடிக்குறிப்பு", சமவாயத்தின் அத்தியாயம் V இன் உரையில் அத்தகையதாக அடையாளங்காணப்பட்ட ஒரு குறிப்பாகும்.

7. ஒரு கப்பலின் கப்பற்சொந்தக்காரர் மற்றும் கப்பற்தலைவர், சமவாயத்தின் அத்தியாயம் V இனால் தேவைப்படுத்தப்பட்ட சாதனங்களின் செயல்நிறைவேற்றம் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகப் போதிய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

8. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம்விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல், ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.